# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 10650 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.</u>**

**முன்னிலை :** **திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,**
**மாநில தகவல் ஆணையர்**

**மனுதாரர் :** **திரு. P. முருகேசன்,**
**வழக்கறிஞர்,**
**வேலன் காம்பளக்ஸ்,**
**பெருமாள் கோவில் தெரு,**
**தென்காசி – 627 811.**

**பொது அதிகார அமைப்பு :** **பொதுத் தகவல் அலுவலர்,**
**சார் பதிவாளர் அலுவலகம்,**
**பத்திரத்துறை,**
**செங்கோட்டை,**
**திருநெல்வேலி மாவட்டம்.**

**பொதுத் தகவல் அலுவலர்,**
**மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,**
**பத்திரத்துறை,**
**தென்காசி.**

---

மனுதாரர் திரு. ப்பி. முருகேசன், திரு.ப்பி. இராமலிங்கம், சார் பதிவாளர், செங்கோட்டை மற்றும் திரு. சி. ஆறுமுகம், மாவட்டப் பதிவாளர், தென்காசி இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் மனுவின் மீது வழக்கு எண். 16968/விசாரணை/08 நாள் 17.02.09 அன்று விசாரிக்கப்பட்டு தகவல் தருமாறு ஆணையிடப்பட்டு உள்ளது. மனுதாரருக்கு ஒரு சில தகவல்கள் தரப்படவில்லை என்று 04.05.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் மனுவில் கேட்டுள்ள ஆவணங்கள் பெறப்பட்டதாகவும் அதில் ஒரு சில பக்கங்கள் விடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் சம்பந்தப்பட்ட கோப்புகளை விசாரணையின் போது அளித்தார். விசாரணையின் போது இவ்வாணையம் அக்கோப்புகளை பார்வையிட்ட வகையில் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களின் நகல்கள் கோப்பில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் விசாரணையின் போது கோப்புகள் நேரிடையாக மனுதாரருக்கு காண்பிக்கப்பட்டது, மனுதாரர் கோப்பை பார்வையிட்டு ஒரு சில பக்கங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் அனைத்து பக்கங்களும் அனுப்பப்பட்டு அதன் நகல் கோப்பில் பராமரிக்கப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவலில் ஒரு சில பக்கங்கள் விடுபட்டு இருப்பதாக மனுதாரர் தெரிவித்ததால் சம்பந்தப்பட்ட பக்கங்கள் பொதுத் தகவல் அலுவலரால் விசாரணையின் போது மனுதாரருக்கு நேரிடையாக வழங்கப்பட்டது. மனுதாரர் உரிய தகவல்கள் பெறப்பட்டதாக விசாரணையில் தெரிவித்தார். இவ்வாணையத்தின் 17.02.09 நாளிட்ட ஆணையில் மனுதாரருக்கு ஒரு வாரத்திற்குள் தகவலை அளிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. கோப்புகளை பார்வையிட்ட போது இவ்வாணையத்தின் ஆணை கிடைக்கப்பெற்று 26.03.09 அன்று மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பப்பட்டு 08.04.09 அன்று மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றதாக விசாரணையில் தெரிய வருகிறது. மனுதாரர் கோரிய தகவலை இவ்வாணையத்தின் ஆணை

பிறப்பிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் வழங்குமாறு ஆணையிடப்பட்டு இருந்தும் தகவல்கள் ஒரு வாரத்திற்குள் வழங்கப்படாததால் இது குறித்த விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு பொதுத் தகவல் அலுவலர், சார் பதிவாளர் அலுவலகம், செங்கோட்டைக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**( சு. மோகன தாஸ் )**
**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். 10650/09</u>**

**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**சார் பதிவாளர் அலுவலகம்,**
**பத்திரத்துறை,**
**செங்கோட்டை,**
**திருநெல்வேலி மாவட்டம்.**

**பொதுத் தகவல் அலுவலர்,**
**மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,**
**பத்திரத்துறை,**
**தென்காசி.**

**திரு. P. முருகேசன்,**
**வழக்கறிஞர்,**
**வேலன் காம்பளக்ஸ்,**
**பெருமாள் கோவில் தெரு,**
**தென்காசி – 627 811.**